தொலைபேசி எண் : 2813 2266, 2813 0787

# அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்

## தலைமைச் செயலகம்

226, அவ்வை சண்முகம் சாலை, இராயப்பேட்டை, சென்னை – 600 014.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். மாளிகை

"மக்களால் நான், மக்களுக்காகவே நான்" - புரட்சித்தலைவி **ஜெ ஜெயலலிதா**

தேதி : 12.04.2024

## <u>தலைமைக் கழக அறிவிப்பு</u>

**அண்ணல் டாக்டர் அம்பேத்கர் அவர்களின் 134–ஆவது பிறந்த நாளை முன்னிட்டு கழகத்தின் சார்பில் அவரது திருஉருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்துதல் : 14.04.2024 – *ஞாயிற்றுக் கிழமை***

சட்ட மேதை அண்ணல் டாக்டர் **அம்பேத்கர்** அவர்களின் **134**–ஆவது பிறந்த நாளான **14.04.2024** – ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணியளவில், சென்னை, ஆற்காடு சாலையில் அமைந்துள்ள டாக்டர் **அம்பேத்கர்** அவர்களுடைய திருஉருவச் சிலைக்கு, **அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், தலைமைக் கழகச் செயலாளர்கள்** மாலை அணிவித்து, மலர் தூவி மரியாதை செலுத்த உள்ளனர்.

இந்நிகழ்ச்சியில், மாவட்டக் கழகச் செயலாளர்கள், கழக நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், முன்னாள் அமைச்சர்கள், முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், கழக சார்பு அமைப்புகளின் மாநில துணை நிர்வாகிகள், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். மன்றம், புரட்சித் தலைவி அம்மா பேரவை, எம்.ஜி.ஆர். இளைஞர் அணி, மகளிர் அணி, மாணவர் அணி, அண்ணா தொழிற்சங்கம், வழக்கறிஞர் பிரிவு, சிறுபான்மையினர் நலப் பிரிவு, விவசாயப் பிரிவு, மீனவர் பிரிவு, மருத்துவ அணி, இலக்கிய அணி, அமைப்பு சாரா ஓட்டுநர்கள் அணி, இளைஞர் பாசறை, இளம் பெண்கள் பாசறை, தகவல் தொழில்நுட்பப் பிரிவு, வர்த்தக அணி மற்றும் கலைப் பிரிவு உட்பட கழகத்தின் பல்வேறு அமைப்புகளைச் சேர்ந்த நிர்வாகிகளும், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளும், கூட்டுறவு சங்கங்களின் முன்னாள் பிரதிநிதிகளும், கழக உடன்பிறப்புகளும் பெருந்திரளாகக் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**கழகப் பொதுச் செயலாளர், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர், தமிழ் நாடு முன்னாள் முதலமைச்சர் 'புரட்சித் தமிழர்' திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்களின் ஒப்புதலோடு இந்த அறிவிப்பு வெளியிடப்படுகிறது.**

அனைத்திந்திய அண்ணா தி.மு.கழகம் தலைமை செயலகம் சென்னை-14

**தலைமைக் கழகம்,**
**புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். மாளிகை**
**அனைத்திந்திய அண்ணா தி.மு.கழகம்.**